**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.36/2022 [CNR No.TNMD240000812022]</u>

ரஜினி .....வாதி

/ எதிர் /

அருண் ......பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 09.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.ஜீவானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.வி.கே.ஜெயசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதி பிராது தொகை ரூ.3,90,500/– உடன் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை ஈடாகும் நாள்வரை 12% வருட வட்டியை செலுத்தக் கோரியும், வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

**1) வழக்குரையின் சுருக்கம்:—**

வாதியும், பிரதிவாதியும் உறவினர்கள் ஆவார்கள். அதன் அடிப்படையில் வாதியிடம் பிரதிவாதி ரூ.3,55,000/— கடனாக கேட்டுள்ளார். வாதியும் கடந்த 05.05.2021 அன்று பிரதிவாதிக்கு ரூ.3,55,000/— கடனாக கொடுத்துள்ளார். மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்ட பிரதிவாதி அன்றே 05.05.2021 அன்று உசிலம்பட்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 6/2021/BKA ஆக பிரமிசாரி நோட்டு பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100/—க்கு ரூ.1/— வீதம் வட்டி சேர்த்து வட்டியும், முதலும் வாதிக்காவது, அல்லது வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும் பொழுது ரொக்கமாக செலுத்தி பிராமிசரி நோட்டை வாபஸ் பெற்றுக்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

மேற்படி பணத்தைப் பெற்றுக்கொண்ட, பிரதிவாதி வட்டியோ, அசலோ செலுத்ததாமல் இருந்து வந்துள்ளார். அதனால் வாதி கடந்த 21.01.2022—ம் தேதி பிரதிவாதிக்கு அசல் மற்றும் வட்டி தொகையை கேட்டு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதி இல்லை என திருப்பப்பட்டுள்ளது. எனவே, பிரதிவாதியிடமிருந்து அசல் மற்றும் வட்டி தொகையை பெற்றுத் தரக் கோரி வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்வழக்குரையின் சுருக்கம்:—**

பிராதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவையாகும். பிரதிவாதி வசதியான குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான

காரணங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியானவர், பிரதிவாதிக்கு எந்த இடத்தில் வைத்து எவ்வளவு பணம் வங்கியிலிருந்து எடுத்து பிரதிவாதிக்கு கொடுத்ததாக பிராதில் குறிப்பிடவில்லை. அதேபோல் வாதியானவருக்கு பிரதிவாதி எந்தவொரு சான்றாவணத்திலும் கையெழுத்து செய்து கொடுக்கவில்லை. வாதியிடமிருந்து பிரதிவாதி எந்தவொரு பணமும் பெறவில்லை. எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கின் வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the suit promissory note dated 05/05/2021 is executed by the defendants in consideration of Rs.3,55,000/-?
2. Whether the plaintiff is entitled for recovery of loan amount from the defendants as prayed for?
3. What other relief of the plaintiff is entitled for?

4) வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் சாட்சியாக வா.சா.2 விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கான தீர்வு:–**

1. 05.05.2021–ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு மறுபயனுக்காக பிரதிவாதியால் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதா?
2. வாதி கோரும் கடன் தொகை வட்டியுடன் பிரதிவாதியிடமிருந்து திரும்ப கிடைக்கத்தக்கதா?

***5.1.*** முதலாவதாக, தாவா வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், வாதியும், பிரதிவாதியும், உறவினர்கள் ஆவார்கள். அதன் அடிப்படையில் பிரதிவாதி கடந்த 05.05.2021 அன்று ரூ.3,55,000/– கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி கடனுக்கு உத்தரவாதமாக வா.சா.ஆ.1 புரோநோட் எழுதி கொடுத்தார். பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி, அசலும், வட்டியும் திரும்ப கொடுக்கவில்லை. ஆகையால், கடந்த 21.01.2022 அன்று வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

அடுத்ததாக, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பிரதிவாதி வாதியிடம் கடனாக பணம் வாங்கவில்லை. வா.சா.ஆ.1 புரோநோட் எழுதிக் கொடுக்கவில்லை என்பதாகும். இதுசம்பந்தமாக, வாதியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, கடந்த 05.05.2021–ம் தேதியிட்ட புரோநோட் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டு இருக்கிறார். வா.சா.ஆ.1–புரோநோட்டை பரிசீலனை செய்யும் பொழுது, மேற்படி புரோநோட் சார்பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. சார்பதிவாளர் முன்னிலையில் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்பதை பிரதிவாதி தெளிவுபடுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

அடுத்ததாக, வா.சா.2–தன்னுடைய சாட்சியத்தில், வா.சா.ஆ.1 புரோநோட்டை பிரதிவாதி எழுதிக் கொடுத்தாகவும், அது பதிவு செய்யப்பட்டதாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார். மேலும், கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வா.சா.ஆ.2–ஐ குறுக்கு விசாரணை செய்யும் பொழுது, வா.சா.ஆ.2–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, பிரதிவாதி அடகு வைத்த நகையை காவல்துறை மூலம் மீட்டெடுக்க தாவா புரேநோட் பதிவு செய்யப்பட்டது என்பதை பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆக, புரோநோட்டில் பிரதிவாதி தான் கையெழுத்து செய்திருக்கிறார் என்பதை வாதி தெளிவுபடுத்தியிருக்கிறார்.

அடுத்ததாக, பிரதிவாதி பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்தார். அவர் தாவா புரோநோட்டை வாதி மிரட்டி எழுதி வாங்கியதாக சாட்சியம் அளித்திருக்கிறார். தாவா புரோநோட்டானது, 05.05.2021 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட புரோநோட்டாகும். பிரதிவாதி தாவா புரோநோட்டை வாதி மிரட்டி வாங்கியது சம்பந்தமாக நாளது தேதி வரை வாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரதிவாதி மேற்படி புரோநோட்டை வாதி மிரட்டி எழுதி வாங்கினார் என்பதற்கு போதுமான சாட்சி மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை. பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ள பி.வா.சா.2–பிரதிவாதியின் உறவினர் ஆவார். ஆக, வா.சா.ஆ.1–புரோநோட்டை, வாதி பிரதிவாதியை மிரட்டி எழுதி வாங்கினார் என கூறுவது ஏற்புடையதாக இல்லை. எனவே, வா.சா.ஆ.1 புரோநோட்டின் அடிப்படையிலும், வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியங்களின் அடிப்படையிலும் பிரதிவாதி வாதியிடம் ரூ.3,55,000/–

கடனாக பெற்றுக் கொண்டு கடந்த 05.05.2021 அன்று வா.சா.ஆ.1 புரோநோட் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்பது நம்பத்தகுந்த சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை வாதிக்கு ஆதரவாக உள்ளதால் வாதி கோரிய கடன் தொகையை பிரதிவாதி வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என எழுவினாக்கள் 1 மற்றும் 2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**6. எழுவினா 3–க்கான தீர்வு:–**

3. வாதிக்கு கிடைக்கக் கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி பிராது தொகை ரூ.3,90,500/–யை வாதிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் கடன் தொகை ரூ.3,55,000/–க்கு பிராது தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை வருட 9% வட்டியும், தீர்ப்பு தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை வருட 6% வட்டியும் வாதிக்கு பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 17:36:51 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>வாதி தரப்பு சாட்சி:-</u>**

வா.சா.1 ரஜினி **(வாதி)**

வா.சா.2 மணி **(3ம் தரப்பினர்)**

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.05.2021 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோநோட் அசல் |
| வா.சா.ஆ.2 | 21.01.2022 | வாதி தரப்பில் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 27.01.2022 | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி மறுத்து அனுப்பிய கவர் |
| வா.சா.ஆ.4 | --- | 1990-ம் ஆண்டு பிரதிவாதி பூர்வீக சொத்து காட்டக்கூடிய கிரைய பத்திர சான்றிட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-</u>**

பி.வா.சா.1 அருண் ( பிரதிவாதி)

பி.வா.சா.2 சக்திமுருகன் ( மூன்றாம் தரப்பினர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

--- இல்லை ---

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.12 17:36:58 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.